
13345

# இலக்கிய விழா

## 1990-1991




# சிறப்பு மலர்

க்கு-கிழக்கு கல்வி கலாசார அலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
திருக்கோணமலை. 05-12-1992

840.98
வடகி
SL IPR

# இலக்கிய விழா

# 1990 - 1991

## சிறப்பு மலர்

வடக்கு - கிழக்கு மாகாண
கல்வி, கலாசார அலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு

05 - 12 - 1992

திருக்கோணமலை.

# இம் மலரில்

## மணம் வீசுவன


❀ "யாழ்நூல்" தந்த செம்மல்

❀ ஆசிச்செய்திகள்

❀ மலரை நுகருமுன்............

❀ இலக்கியவிழாவும் புத்தகக்கண்காட்சியும்

❀ இலக்கியப் பரிசில்களை பெறும் நூல்கள்

❀ இலக்கிய பரிசு திட்டத்திற்கு கிடைத்த இலக்கியங்கள்

❀ நடுநிலையாளர்கள்


**ஆக்கங்கள்**


❀ சமய இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைநெறி

❀ நமக்கு மேலே ஒருவன்

❀ நமது நாட்டின் பண்பாட்டு பாரம்பரியம்

❀ செந்தமிழும் புதுப்புனைவும்

❀ எமது கலைஞர்களின் அவலங்கள்

❀ மேற்குலகு நாடுகளில் தமிழ்ச் சஞ்சிகைகள் - ஓர் ஆய்வு

❀ நன்றிக்குரியவர்கள்

வெள்ள நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ள நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

தமிழ் கூறும் நல்லுலகிற்கு

"யாழ் நூல்"


தந்த செம்மல்

தமிழ் வித்தகர்

# சுவாமி விபுலாநந்தர்

நூற்றாண்டு நினைவாக

இம்மலர் சமர்ப்பணம்.



# வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர்

# சொ. கணேசநாதன் அவர்களின்

## ஆசிச் செய்தி

. மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்கான விழும்மியங்களை மக்கள் மத்தியில் மறைமுகமாகப் புகுத்தி அவர்களை நெறிப்படுத்துவதில் இலக்கியம் வரலாற்றுக் கால முதல் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது.

பண்டைக்கால இலக்கியங்கள் அக்கால மக்களின் மேம்பாட்டிற்கும், நாகரீகத் திற்கும் குறியீடாகவும், வரலாற்றுச் சான்றாகவும் இன்றும் நமக்குப் பயன்படுகின் றன. இவ்வகையில் எகிப்து, கிரேக்கம் முதலிய நாடுகளைவிட, பண்டைத் தமிழகம் செழுமையான இலக்கிய வளத்தைக் கொண்டது. கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னரே முதல், இடை, கடை எனும் மூன்று சங்கங்கள் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தி யுள்ளன. சங்ககால இலக்கியங்களில், அழிந்தவை போக எஞ்சியவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதிணெண்கீழ்க் கணக்கு எனத் தொகுக்கப்பட்டு இன்றும் பழந் தமிழ் இலக்கியத்தின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட அந்நிய படையெடுப்புக் காலங்களில் இலக்கிய ஆக்கத்தில் சிறிது தளர்வு ஏற்பட்டிருந்த போதும், அன்றுமுதல் இன்றுவரை இடை யறாது தமிழ் இலக்கியம் வளர்ந்து வந்துள்ளது.

இக்காலத்தில் நமது தமிழ் இலக்கியம், பண்டைக் காலத்தைப்போல பெரும் அளவில் படைக்கப்படாவிட்டாலும், கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், விமர் சனம், கட்டுரை என நவீன இலக்கிய வடிவங்கள் குறிப்பிடத்தக்க அளவு உரு வாகின்றன. ஈழத்திலும் தமிழகத்தோடு போட்டிபோடும் அளவு தரமான இலக்கியப் படைப்புக்களை உருவாக்கும் எழுத்தாளர்கள் நிறைய உள்ளார்கள். ஆனால் இவர் களுடைய ஆக்கங்கள் வேகமாக வளர்ச்சிபெற முடியாதபடி பின்வரும் இடர்ப்பாடுகள் குறுக்கிடுகின்றன.

அ) பிரசுர களம் இல்லாமை.
ஆ) பரவலான விநியோக ஏற்பாடுகள் இல்லாமை.
இ) ஈழத்து வாசகரிடையே நூல்கள் விலை கொடுத்துப் படிக்கும் பழக்கம் குறை வாக உள்ளமை.

மேற்படி இடர்ப்பாடுகளை மேவி, எழுத்தாளர்களைக் கைதூக்கிவிடும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு உள்ளூர் எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களில் கணிசமான பிரதிகளைக் கொள் வனவு செய்வதும், ஆண்டுதோறும் சாகித்தியப் போட்டிகளை நடாத்திப் பல்வேறு துறைகளில் சிறப்பான படைப்புக்களை உருவாக்கிய எழுத்தாளர்களுக்குப் பரிசு வழங்கிக் கௌரவிப்பதும் பாராட்டத்தக்க முயற்சிகளாகும்.

மேற்படி நிகழ்ச்சிகளின் நினைவாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிடும் இம்மலர் ஒரு பயனுள்ள இலக்கியச் சுவடாகவும் இலக்கியச் சுவடியாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**சொ. கணேசநாதன்**
பிரதம செயலாளர்

வடக்கு - கிழக்கு மாகாணம்
திருக்கோணமலை.

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமுகநல, கூட்டுறவு அமைச்சின் செயலாளர்

# திரு. இ. யோகநாதன் வழங்கிய

## ஆசிச்செய்தி

கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு எடுக்கும் இந்த இலக்கிய விழாவிற்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், ஆய்வு இலக்கியம் ஆகிய ஆறு துறைகளிலும் எழுத்தாளர்களது ஆக்கங்களுக்கு பரிசில்களும், பாராட்டுக்களும் இவ்வைபவத்தில் வழங்கப்படும் எனவும் ஒவ்வொரு துறைக்கும் ரூபா 3000/- பெறுமதியான பரிசுப் பணம் வழங்க இருப்பதாகவும் அறிகின்றேன். இவ்வொழுங்கு எழுத்தாளர்களை மேலும் மேலும் ஊக்குவிப்பதோடு புதிய ஆக்கங்களுக்கும் வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

கூட்டுறவுக் கல்லூரி, மனித மேம்பாட்டு அபிவிருத்தி நிலையம் விழாக் குழுவினருடன் இணைந்து ஒரு புத்தக கண்காட்சியையும் இரண்டு தினங்களுக்கு நடாத்த ஒழுங்கு செய்து இருக்கிறார்கள். இக்கண்காட்சியும் இலக்கிய முயற்சிகளுக்கு புத்துயிர் அளிப்பதாக அமையும்.

விழாக் குழுவினர் இயல் தமிழோடு நின்றுவிடாமல் இசை, நாடகத் தமிழில் அடங்கும் நடனம், மெல்லிசை போன்ற நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து சான்றிதழ் வழங்க இருப்பது இவ்விழாவிற்கு மேலும் மெருகூட்டுகிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**“ விழா சிறந்து விளங்க எனது நல்வாழ்த்துக்கள் ”**

**இ. யோகநாதன்**
செயலாளர்

வடக்கு - கிழக்கு மாகாண

கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

# ஜனாப் எம்.ஏ.சி. முகைதீன் அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

கடந்த வருடம்போன்று இவ்வருடமும் வடக்கு - கிழக்கில் இலக்கியபணி புரிந்து வரும் எழுத்தாளர்களது ஆக்கங்களுக்கு பரிசில் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளமை பெரு மகிழ்ச்சியினைத் தருகின்றது. இவ்வருடம் 1990, 1991ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த ஆறுதுறைகளுக்கும் அதனை ஆக்கிய எழுத்தாளர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கவுள்ளோம். இவ்வருடம் பரிசிற்காக நாவல், சிறுகதை, கவிதை, சமயம், சிறுவர் இலக்கியம், ஆய்வு இலக்கியம் என்னும் ஆறுதுறைகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

இப்போட்டிகளுக்கு மிக ஆற்றலும், திறமையுமுள்ள எழுத்தாளர்களின் படைப் புக்கள் எமக்குக் கிடைத்தன. இவற்றுள் சிறந்தவற்றை தேர்ந்தெடுப்பது என்பது கடு மையான முயற்சியாகவே எமக்கிருந்தது. இப்பணியினை நன்கு நிறைவேற்றித்தந்த நடுநிலையாளர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வருட இலக்கிய விழா மேலும் ஒரு புதுப் பொலி வினைப் பெறுகின்றது. ஏனெனில் புத்தகக் கண்காட்சி ஒன்றினையும் இதனுடன் ஒழுங்கு செய்துள்ளோம். இலங்கை, இந்திய எழுத்தாளர்களது சிறந்த பலஆக்கங்கள் கண்காட்சியில் இடம்பெறுவது ஆய்வாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இப்புத்தகக் கண்காட்சி மனிதவள மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் இடம் பெறு கின்றது. இதன் இயக்குநர் திரு. எஸ். பற்குணம் அவர்கள் என்றும் எமது நன்றிக் குரியவரே.

இனி அடுத்து வரும் ஆண்டுக்ளில் இலக்கிய விழாவில் இன்னும் பலஅம்சங்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளோம். இதற்கான சகல ஆதரவும் இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து கிடைக்குமென நம்புகின்றோம். எல்லா வழிகளிலும் விழா சிறப்புற அமையவும் அதனோடு மலரும் விழா மலர் நல்ல பல ஆக்கங்களைக் கொண்டு மலரவும் நல்லாசி கூறுகின்றேன்.

எம். ஏ. சி. முகைதீன்
செயலாளர்

# மலரை நுகருமுன். . . . . . .

கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாவது இலக்கிய விழா வெகு சிறப்பாக இடம்பெறும் இத்தருணத்தில் விசேட விழா மலர் ஒன்றும் வெளியிடப்படுகின்றது. கடந்த ஆண்டு நான்கு இலக்கியத் துறைகளுக்கு மட்டுமே பரிசில் வழங்கப் பட்டது. இவ்வாண்டு பத்துத் துறைகளுக்குப் பரிசும் பாராட்டும் வழங்க வேண்டுமென எண்ணங்கொண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன்படி நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், ஆய்வு இலக்கியம் என்னும் ஆறு துறைகளுக்கு மட்டுமே இம்முறை பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. இவற்றிற்கான பணப்பரிசு ரூபா 3,000/- வழங்கப்படுவதோடு எழுத்தாளர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இன்று நாட்டின் தமிழ் இலக்கியத்துறை துரித வளர்ச்சிப்பாதையில் செல்வதற்கான நடவடிக்கைகளை அரச நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இவற்றுள் இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு, இஸ்லாமிய கலாசார இராஜாங்க அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு என்பன சிறப்பாக குறிப்பிடத்தக்கன. இதே போன்று தனிப்பட்ட நிறுவனங்களும், இலக்கிய மன்றங்களும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் கொடுத்து நூலினை அச்சிட்டு வெளியிட்டு வருவதால் ஏராளமான ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. தற்பொழுது வெளிவரும் இலக்கியப் படைப்புகளில் மக்களின் அபிலாஷைகள், உள்ளுணர்வுகள், பிரதிபலிப்பதனை காணமுடிகிறது. எதிர்வரும் காலங்களில் எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், மற்றும் கலைஞர்களுக்கும் கூடுதலான ஊக்கம் அளிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முறை நடைபெறும் இலக்கிய விழாவோடு இன்னுமொரு அங்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்திய எழுத்தாளர்களுடைய நூல்கள் அடங்கிய கண்காட்சியொன்று இரண்டு தினங்களுக்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இக்கண்காட்சி திருக்கோணமலை மனிதவள மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன்

நடைபெறுகின்றது. இந்நூல் கண்காட்சி ஆய்வுகளை மேற்கொள்ளவிரும்பும் மாணவர்களுக்கு அதிகம் பயன் அளிக்கக்கூடியது. நூல் விற்பனையும் இடம்பெறும். தமிழ் இலக்கிய விழாக்கள் இவ்விதம் நடைபெறுவது அறிஞர்களுக்கு மட்டுமன்றி இலக்கிய நெஞ்சங்களுக்கும் நல்ல பலன் தரக்கூடியதாகவுள்ளது. மனித வாழ்வின் நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதே இலக்கியங்கள். அப்போர்பட்ட இலக்கியங்களைப் படைக்கும் எழுத்தாளர்கள் என்றும் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே. இதனைக் கருத்திற் கொண்டே எமது கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொருளாதார வசதி குறைந்த எழுத்தாளர்களது ஆக்கங்களை அச்சிட்டு வெளியிடுவதிலுள்ள கஷ்டங்களைக் கருத்திற்கொண்டு அடுத்தாண்டு இப்பணியினையும் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

முடிவாக, இவ்வாண்டு விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென நல்லாசி கூறிய வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளருக்கும், புனர்வாழ்வு, புனரமைப்பு சமுகநலத்துறை அமைச்சின் செயலாளருக்கும், எமது அமைச்சின் செயலாளருக்கும், கவிதைகள், கட்டுரைகள் முதலானவற்றைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும், மலர்க்குழுவினருக்கும், கலை நிகழ்ச்சியினை வழங்கியவர்களுக்கும், விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் ஏனைய சகல ஒத்தாசைகளையும் வழங்கியோருக்கும் விழாக்குழுவின் செயலாளர் என்ற வகையில் மனப்பூர்வமான பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**எஸ். எதிர்மன்னசிங்கம்**
கலாசார அலுவல்கள் உதவிப் பணிப்பாளரும்,
விழாக்குழுச் செயலாளரும்.

# கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை

அமைச்சு நடாத்தும்

# இலக்கிய விழாவும் புத்தகக்கண்காட்சியும்

## 1992

இடம் : தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம்

காலம் : **05-12-92 சனிக்கிழமை, பி. ப. 3.00 மணி**

தலைமை : ஜனாப் எம். ஏ. சீ. முகைதீன்,
செயலாளர்,
கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

பிரதம விருந்தினர்

திரு. இ. யோகநாதன்,
செயலாளர்,
புனர்வாழ்வு, புனரமைப்பு, சமுகநலத்துறை, கூட்டுறவு அமைச்சு

நிகழ்வன

★ மங்கல இசை

★ விருந்தினரை வரவேற்றல்

★ மங்கள விளக்கேற்றல்

★ தமிழ் வாழ்த்து : தி/ஸ்ரீ சண்முக வித்தியாலய மாணவிகள்

★ தலைமை உரை : ஜனாப் எம். ஏ. சீ. முகைதீன்,
*செயலாளர், கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு*

★ சிறப்புரை

★ பரிசளிப்பும் விருது வழங்கலும்

★ மலர் வெளியீடு

★ பிரதம விருந்தினர் உரை : திரு. இ. யோகநாதன்,
*செயலாளர், புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகநலத்துறை, கூட்டுறவு அமைச்சு*

★ பரிசில் பெறுவோர் உரை

★ சிறப்பு நிகழ்ச்சி : பரத நாட்டியம் தி/ ஸ்ரீ சண்முக வித்தியாலயம்

★ நன்றியுரை : திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்,
*உதவிப்பணிப்பாளர், கலாசார அலுவல்கள்*

புத்தகக் கண்காட்சி மனிதவள அபிவிருத்தி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் 04-12-92 - 05-12-92 ஆகிய இரு தினங்கள் தி / ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் இடம்பெறும்.
[ மு. ப. 8.30 - பி. ப. 5.00 மணி வரை ]

● ஆரம்பித்து வைப்பவர் : திரு. எஸ். பற்குணம்,
*பிரதிச் செயலாளர், உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு*

# அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலக்கிய விழா ஏற்பாட்டுக் குழு,
திருக்கோணமலை.

# இலக்கியப் பரிசில்களை பெறும் நூல்கள்

## 1990 - 1991

- **சிறுகதை**

கிராமத்து மண்கள் சிவக்கின்றன

- சித்திரா நாகநாதன்

- **கவிதை**

கவிதைக் கனவுகள்

- கவிஞர் பாரதிபாலன் (க. ஜெயகுமார்)

- **சிறுவர் இலக்கியம்**

புள்ளி புள்ளி மானே

- கவிஞர் திமிலை மகாலிங்கம்

- **சமய இலக்கியம்**

யோகர் சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்

- சிவதொண்டர்

- **நாவல் இலக்கியம்**

குவேனி 'வரலாற்று நவீனம்'

- செங்கையாழியான் (க. குணராசா)

- **ஆய்வு இலக்கியம்**

சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்

- தனபாக்கியம் குணபாலசிங்கம்

# இலக்கிய பரிசு திட்டத்திற்கு கிடைத்த இலக்கியங்கள்

## நாவல் இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | உள்ளத்தின் உள்ளே | - 1990 - | ந. பாலேஸ்வரி |
| 2 | நான் நீதியின் பக்கம் | - 1991 - | க. அருள்சுப்பிரமணியம் |
| 3 | ஒரு மைய வட்டம் | - 1990 - | செங்கையாழியான் (க. குணராசா) |
| 4 | குவேனி | - 1991 - | ,, |
| 5 | யாககுண்டம் | - 1991 - | ,, |
| 6 | ஜன்ம பூமி | - 1991 - | ,, |
| 7 | கந்தவேள் கோட்டம் | - 1991 - | ,, |
| 8 | ஆறுகால்மடம் | - 1991 - | ,, |

## சமய இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | திருவடி சேர வாரீர் | - 1990 - | ந. செல்லப்பா |
| 2 | புனித ஹஜ்ஜின் வணக்க முறைகள் | - 1990 - | மௌலவி அல்ஹாஜ் அல் - ஹாலிஸ் ஐ. எல். காதிர்மீரான்சாகிப் (நூரி) |
| 3 | மட்டக்களப்பு சைவக் கோவில்கள் [2] | - 1991 - | பண்டிதர் வி. சி. கந்தையா |
| 4 | சைவமும் நாமும் | - 1991 - | எஸ். தில்லைநாதன் |
| 5 | யோகர் சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும் | - 1990 - | சிவதொண்டர் |
| 6 | சிந்தனை தேன்துளிகள் | - 1991 - | சிவமயச்செல்வி புலவர் சி.விசாலாட்சி |

## சிறுவர் இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விடாமுயற்சி | - 1991 - | தாபி. சுப்பிரமணியம் |
| 2 | சிறுவர் கதைகள் | - 1991 - | த. துரைசிங்கம் |
| 3 | பாப்பா பாட்டு | - 1991 - | த. துரைசிங்கம் |
| 4 | இன்பக்கனிகள் | - 1990 - | எஸ். அருளானந்தம் |
| 5 | புள்ளி புள்ளி மானே | - 1991 - | திமிலை. மகாலிங்கம் |
| 6 | குழந்தை கவியமுதம் | - 1991 - | த. தர்மேந்திரா |
| 7 | பாலர் பா | - 1991 - | வே. குமாரசாமி |

## சிறுகதை இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | நிர்வாணம் | 1991 | உடுவை தில்லைநடராசா |
| 2 | கிராமத்து மண்கள் சிவக்கின்றன | 1990 | சித்திரா நாகநாதன் |
| 3 | இவளுக்காகவா | 1990 | ஜுனைதா சரீப் |
| 4 | நாங்கள் மனிதஇனம் | 1991 | மருதூர் ஏ. மஜீத் |
| 5 | முத்துமீரான் சிறுகதைகள் | 1991 | முத்துமீரான் |

## கவிதை இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விபுலானந்தர் வாழ்கிறார் | 1991 | ஆரையூர் இளவல் அ. செல்லத்தம்பி |
| 2 | ஆனைவிழுந்தான் விநாயகர் வரலாறு | 1990 | மட்டுவில் ஆ. நடராசா |
| 3 | விபுலானந்தர் பாவியம் | 1991 | கவிஞர் சே. குணரத்தினம் |
| 4 | கவிதைக் கனவுகள் | 1990 | கவிஞர் பாரதிபாலன் (ஜெயகுமார்) |
| 5 | கிராமிய கவி அமுதல் | 1991 | முத்துமீரான் |

## ஆய்வு இலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1 | அஸீசும் தமிழும் | 1990 | ஜனாப் ஏ. எம். ஏ. நகியா |
| 2 | நபிகள் நாயகம் நம் போன்ற மனிதனா? | 1991 | மௌலவி அல்ஹாஜ் ஏ. அப்துல்ரவு |
| 3 | சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும் | 1990 | தனபாக்கியம் குணபாலசிங்கம் |
| 4 | புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி | 1990 | புலவர் ந. சிவபாதசுந்தரனார் |
| 5 | அக்கரைப்பற்று வரலாறு | 1991 | ஜனாப் ஏ. ஆர். எம். சலீம் |
| 6 | முழுமதி | 1991 | மௌலவி எம். எச். எம். புகாரி |

குலமே நாசம் உறும் போதங்கே
கூடும் தர்மங்கள் குலைந்தே அழியும்
குலதர்மங்கள் குலையுறும் என்றால்
குவலயம் முற்றும் அதர்மமே சூழும்

\- பகவத்கீதை

## நடுநிலையாளர்கள்

**கலாநிதி சி. மௌனகுரு** *தலைவர், நுண்கலைப்பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்*

**வித்துவான் சா. இ. கமலநாதன்** *8, புகையிரத நிலையவீதி, மட்டக்களப்பு*

**பண்டிதர் இ. வடிவேல்** *15, வித்தியாலயம் லேன், திருக்கோணமலை*

**செல்வி தங்கேஸ்வரி கதிராமன்** *கலாசார உத்தியோகத்தர், மட்டக்களப்பு*

**ஜனாப் வை. அகமட்** *மேலதிக அரசாங்க அதிபர், கச்சேரி, மட்டக்களப்பு*

**கவிஞர் எஸ். கோபாலசிங்கம்** *எல்லைவீதி, மட்டக்களப்பு*

**கவிஞர் செ. குணரெத்தினம்** *3ம் குறுக்குத்தெரு, அமிர்தகழி, மட்டக்களப்பு*

**ஜனாப் எம். ஐ. அன்புமுகைதீன்** *கல்முனை*

**திரு. இரா. நாகலிங்கம்** *சிரேஸ்ட உதவிச்செயலாளர், ஆளுநர் பணிமனை, திருக்கோணமலை*

**திருமதி அ. யோகராசா** *(மண்டூர் அசோகா)*

**திரு. வ. சிவசுப்பிரமணியம்** *84, நல்லையாவீதி, மட்டக்களப்பு*

**திரு. செ. வினாசித்தம்பி** *விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு*

**கவிமணி திமிலைத்துமிலன்** *விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு*

**திரு. வ. அ. இராசரத்தினம்** *மூதூர்*

**திருமதி ந. பாலேஸ்வரி** *டைக்வீதி, திருக்கோணமலை*

**திரு. எஸ். இராஜேந்திரம் (தாமரைத்தீவான்)**

**திரு. செ. யோகராசா** *(கருணை யோகன்) விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்*

**திரு. தாபி. சுப்பிரமணியம்** *அதிபர், தி/புனித வளனார் பாடசாலை*

> இளையவர் மூத்தவர் என்ற வேறுபாடு இல்லாமல்
> இளையவர் கற்பதற்கு ஆர்வமாகவும் மூத்தவர்
> கற்பிப்பதற்கு ஆர்வமாகவும் இருக்கும்போது
> அறிவு வெளிப்படுகிறது.
>
> – **டாக்டர் ராதா கிருஷ்ணன்**

# சமய இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கை நெறி

சைவப்புலவர் - பண்டிதர்
ஆர். வடிவேல்

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல மானிட வாழ்க்கைக்கு இரண்டு பக்கங்களுண்டு. நாணயத்தின் ஒரு பக்கம் அரச முத்திரையாலும், மறுபக்கம் அதன் பெறுமதியாலும் நிறைவு பெற்று மதிக்கப்படுகின்றது. மானிட வாழ்க்கையின் ஒரு பக்கம் தெய்வீக வாழ்க்கையினாலும், மறுபக்கம் லௌகீக வாழ்க்கையினாலும், நிறைவு பெற்று பூரண வாழ்க்கைநெறி பொலிவு பெறுகிறது.

மானிடப் பிறவியின் மாண்பைக்குறித்து ''எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிது காண்'' ''இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ அறிகிலேன்'' என்று ஏங்குகிறார் தாயுமான சுவாமிகள். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைத் துதித்தலாகிய தெய்வீக வாழ்க்கைக்கு மானிடரை நெறிப்படுத்துகிறார் நாவுக்கரசர். நெடுங்காலமாக உலகப்பற்றுக்களில் கட்டுண்டு வீழும் லௌகீக வாழ்க்கையையும் நினைவுபடுத்துகிறார் அவர். ''வீழ்த்தவாவினையேன் நெடுங்காலமே'' என்பது அவர் கோடிட்டுக் காட்டும் குறிப்பு.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை

என்பது சம்பந்தர் வாக்கு. தினமும் இந்தப் பூமியில் நல்லவண்ணம் வாழ்கின்ற லௌகீக வாழ்க்கைக்கும், நல்ல கதிக்கு யாதுமோர் குறை வில்லாத தெய்வீக வாழ்க்கைக்கும் நம்மை நெறிப்படுத்துகிறார் சம்பந்தர்.

'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
விழ்கின்றாய் நீ அவலக்கடலாய வெள்ளத்தே.'

என்பது மாணிக்கவாசகர் வாக்கு. வல்வினைப்பட்டு ஆழாமற் காப்பவனாகிய இறைவனை ஏத்திவாழும் தெய்வீக வாழ்க்கையையும், வல்வினைப்பட்டு அவலக்கடலிலே ஆழ்கின்ற லௌகீக வாழ்க்கையையும் மணிவாசகர் நமக்கு நினைவு படுத்துகிறார்.

மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். நாம் எதற்காகப் பிறந்தோம்? என்ற வினாவை எந்த நேரமும் எழுப்பிக் கொண்டுதான் இருக்கின்றான். சிந்தனையின் மூலம் வந்தனையின் அவசியத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டு கொண்டவன் மனிதன். விஞ்ஞானத்தினால் விண்ணை அளக்கலாம், மண்ணை வளப்படுத்தலாம். மெய்ஞானத்தினால் மனத்தை அளக்கலாம், உயிரை வளமாக்கலாம் என்று கண்டவன் மனிதன். நாணயத்தை ஒத்த இருபக்க வாழ்வுடைய மனிதன் நாணயமாக வாழ்வதற்கு, அவனுக்கு அறநெறியையும் அருள் நெறியையும் சமய இலக்கியங்கள் காட்டுகின்றன.

தினக் குறிப்பெழுதும் கையேட்டில் (Diary) மனிதன் நாளாந்தம் செய்ததையும் செய்ய வேண்டியவைகளையும் எழுதி வாழ்கிறான். தினமும் அதைப் படிக்கிறான். மறந்தவற்றை மீண்டும் நினைவுபடுத்தி செயற்படுகிறான். இதனால் அவனுடைய லௌகீக வாழ்க்கை இடையீடின்றிச் சீராக நடைபெறுகின்றது. இந்த வாழ்க்கை அறநெறி சார்ந்ததாய் அமையுமானால் லௌகீக சுகத்தை அனுபவிப்பான். தினக் குறிப்பெழுதும் கையேடு ஒரு மனிதனை நாளாந்த வாழ்க்கையைச் சீராக நடத்த ஆற்றுப்படுத்துவதுபோல சான்றோர்கள் படைத்தளித்துள்ள சமய இலக்கியங்கள் மனிதனை அறநெறி, அருள்நெறியாகிய வாழ்க்கைநெறிக்கு ஆற்றுப் படுத்துகின்றன.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் முதல் நூல்களாய் விளங்குவன

வேத, சிவாகமங்களாகும். அன்பின் அடிப்படையில் அறநெறியிலும், அருள்நெறியிலும் வாழும் வாழ்க்கையை வேதம் குறிப்பாகவும், ஆகமங்கள் சிறப்பாகவும் எடுத்துக் கூறுகின்றன. இதனைச் சைவநெறி, சிவநெறி என்றும் கூறலாம். வேத சிவாகமங்களை அடியொற்றிப் படைக்கப்பட்ட சித்தாந்த சாஸ்திரங்கள், பன்னிரு திருமுறைகள், புராண இதிகாசங்கள், பிரபந்தங்கள், சித்தர் பாடல்கள், ஞானச் சான்றோரால் ஆக்கப்பட்ட ஏனைய பனுவல்கள் அனைத்தும் சமய இலக்கியங்களின் பாற்படுவன.

வேதாகமங்களில் அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நான்கு புருஷார்த்தங்களும் பொதுவாகக் கூறப்பட்டு வீடுபேறு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. இதனை அடைவதற்குரிய நான்கு படிகளாக அமைவனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நால்வகைச் சாதனங்களையும் சிறப்பாக நால்வர் பெருமக்களும் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். நாம் ஒவ்வொருவரும் நலமாக வாழ வேண்டுமானால் அவர்கள் வாழ்ந்து காட்டிய ஒழுங்கும், கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாது வேண்டப்படும். அறநெறிவாழ்விலும், அருள்நெறி வாழ்விலும் இந்த ஒழுங்கும், கட்டுப்பாடும் அமைய வேண்டும். அகத்தூய்மையும், புறத்தூய்மையும் பொருந்திய வாழ்வே உண்மை வாழ்வு. இதனைச் சமயம் ஒன்றினால்தான் ஏற்படுத்திக்கொள்ள முடியும். சமய குரவர்கள் நால்வரும் இந்த ஒழுங்கான வாழ்வையே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினார்கள்.

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்''

என்பது வள்ளுவம்.

அறஞ்சார்ந்த வாழ்க்கையையும், அருள் சேர்ந்த வாழ்க்கையையும் முடிந்தவரையில் தவறாது கடைப்பிடித்து வாழவேண்டும். அந்த வாழ்க்கை நெறியைச் செல்லும் வாயெல்லாம் ஓவாது மேற்கொள்ள வேண்டும் என்றார் வள்ளுவர். வாய் என்பது வழி. அதாவது மனம் வாக்கு, காயம் என்பன அந்த வழிகள். எனவே திரிகரண சுத்தியோடு அறநெறியிலும், அருள் நெறியிலும் வாழ்க்கையை மேற்கொள்ள வழி காட்டுவன சமய இலக்கியங்கள்.

உலகத்திலுள்ள பல்வேறு மதங்களும் சுக போகங்களில் மனதை விட்டுவிடக் கூடாதென்று சொல்லுகின்றன. இந்துமதமும் இக்கோட்பாட்டை ஒப்புக் கொண்டுள்ள போதிலும், உலகத்தின் வசதிகளையும், சுகபோகங்களையும் ஒதுக்க வேண்டுமென்றோ, துறக்க வேண்டுமென்றோ கூறவில்லை. அவை கெடுதலானவை என்று கூடச் சொல்லவில்லை. தர்மத்தைக் கடைப்பிடித்து, பொருளை அனுபவித்து, போக சுகங்களை நுகர்ந்து இறைவனை அடையும் பரிபக்குவம் பெறவேண்டுமென்றுதான் இந்து மதம் கூறுகின்றது. நிறைவாழ்க்கையின் அங்கங்களாகவே தர்ம, அர்த்த, காம, மோட்சங்களை நமது சமய இலக்கியங்கள் காட்டுகின்றன. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற வெவ்வேறு நிலைகளையுங் கடந்து இறைவனை அடையும் வாழ்க்கை அற வாழ்க்கையாகவும், அருள் வாழ்க்கையாகவும் அமைவதற்குச் சமய இலக்கியங்கள் வழி காட்டுகின்றன.

சேக்கிழாரடிகள் அருளிச்செய்த பெரிய புராணம் அறுபத்திமூன்று நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றது. ஒவ்வொரு நாயனாரும் அறநெறியிலும், அருள்நெறியிலும் வாழ்ந்து புருஷார்த்தங்களை அனுபவித்தார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரப் படையறாத் திருக்கரத்துடன் ஆலயங்கள் தோறும் சென்று தொண்டு புரிந்து சரியை நெறியில் வாழ்ந்து காட்டினார். '' பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றவேண்டுமென்றும், நாக்கைக் கொண்டரன் நாமம் நவில வேண்டுமென்றும், துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்து உன் அடைக்கலங் கண்டாய்'' என்று சரணாகதி அடைகிறார். இதனைத் தாசமார்க்கம் என்று சொல்வர்.

புறத்தொழிலாலும், அகத்தொழிலாலும் இறைவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே கிரியை எனப்படும். பூசை, தோத்திரம், பிரதட்சணம், நமஸ்காரம் முதலியவற்றால் வழிபட்டு, சிவமொன்றையே தியானப் பொருளாக அறிந்து அனுபூதி பெற்றவர் திருஞானசம்பந்தர். ''கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை'' என்று கிரியை நெறி நின்றாரைப் போற்றிப் பாடியவர் சம்பந்தர். அவர் சற்புத்திர நெறி நின்று முத்தியடைந்தவர்.

இறைவனோடு தோழமைத் தொடர்பு பூண்டவர் சுந்தரர். ''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்

நான் செய்யும் துருசுகளுக் குடனாகி'' என்று தமது தோழமைத் தொடர்பை விளக்குகிறார்.

''எங்கேனும் இருந்து உன்னடியேன் உனை
நினைத்தால்
அங்கேவந்து என்னோடும் உடனாகி நின்றருளி''

என்று அகத்தொழிலால் இறைவனுடைய அருவத் திருமேனியை வழிபட்டு ஒன்றியவர் சுந்தரர். இது அவர் சகமார்க்கத்தில் வாழ்ந்து காட்டிய யோகநெறி.

ஞானம் என்பது அறிவுத் தொழிலால் இறைவனுடைய அகண்டாகாரத் தன்மையை அறிந்து தியானிப்பது. ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், ஞானப் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் இவை ஐந்தும் ஞான பூசையாகும். இறைவனே குருவாகி வந்து ஞானத்தை அருளியதை மணிவாசகர் வரலாற்றில் காண்கிறோம். சன்மார்க்க நெறி நின்று ஞான சாதனையால் இறைவனை அடைந்தவர் மணிவாசகர்.

சமய குரவர்கள் நால்வரும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறியிலும் வாழ்ந்து காட்டினார்கள். அவர்களுடைய வாழ்வில் ஒழுங்கும், கட்டுப்பாடும் இருந்தது. ''நாலுபேர் சொன்னபடி நட'' என்பார்கள். அவர்கள் காட்டிய வழியிலே நாம் லௌகீக, தெய்வீக வாழ்க்கையை நடத்துவோமானால் ''அல்லல் என் செய்யும் அருவினை என் செய்யும் தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செய்யும்'' என்ற தெளிவோடும் துணிவோடும் இவ்வுலகில் நல்லவண்ணம் வாழலாம். இத் தகைய வாழ்க்கையை அறநெறியிலும், அருள் நெறியிலும் வாழ்வதற்கு வழி காட்டுவன சமய இலக்கியங்கள்.

★ ★ ★

கருணை நிரம்பிய உள்ளங்கள் இறைவனுக்கு ஒப்பானது. ஏனென்றால் இறைவனுடைய தன்மையே அன்பும், கருணையும் ஆகும். அருள் மழை பொழிவதில் வல்லவன் இறைவன்.

ஆண்டவன் அருள்பெற்று, அவன் நிலையடைய ஞானம் தேவை. இறைவன் அருளால் மட்டுமே பெறக்கூடிய அந்த ஞானத்தைப் பெற மனம் பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

- திருமந்திரம்

## நமக்கு மேலே ஒருவன்

ஊழ்வினை சூழ்வினை ஊறுசெய் கோழ்வினை
வாழ்வினில் கலந்ததும் வளர்ந்தது மலர்ந்ததும்
நூலிழை போலுறு மானிட வாசலில்
ஆல்விழு தெனத்தொடர் ஆவதும் அழிவதும்

நினைவுகள் நிகழ்வதாய்; நிகழ்வுகள் நினைவதாய்
இனியது பயனிலை; செயல்படல் பொருளிலை
எனும்நிலை உலகிடை எழுவாய் எனப்படல்
தொனிப்பொரு ளானதால் பரம்பொருள் மறைந்தது !

கருவையும் தகர்த்திடும் கருவிகள் ஆயிரம்
கடலையும் சுருக்கிடும் களப்படை ஆயிரம்
உறுமியே ஒளிவிடும் ஊர்திகள் ஆயிரம்
ஒருநொடி வாழ்வதோ கோடியில் ஆயிரம்

கருப் பையினில் கணிப்பைக் காட்டிட
கம்பி யூட்டரில் விந்தைகள் செய்தாய்
அகப்பையில் ஆயிரம் பொத்தல்கள் விழுந்தன
அடைக்க எதுவழி அறிந்திரோ மானிடா ?

ஆசையும் அகந்தையும் அழிந்ததா ? அழித்ததா ?
பூசலும் போட்டியும் புறத்ததா ? அகத்ததா ?
நேசமும் பாசமும் நிலைத்ததா ? தலைத்ததா ?
ஓசையும் ஒளியும் உனக்குளா ? இறைக்குளா ?

— வெல்லவூர்க் கோபால்

# நமது நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம்

நமது நாடு ஈழத்தின் கிழக்கே நீர்வளமும் நிலவளமும் பெற்றுச் சிறந்த நெற்களஞ்சியமாய் திகழும் சிறப்புடையது. இது அண்மைக்காலம் வரை கிழக்குப் பிராந்தியம் என அழைக்கப் பட்டு திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாய் இருந்து வந்தது. ஆனால் இன்று திருக்கோணமலைப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களே மட்டக்களப்பு தமிழகம் என அழைக்கப்பட்டு வருகின்றது. இன் நாடு மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் என்ற இரு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இன்று திகழ்கின்றது.

மகாவலிகங்கையின் ஒரு கிளையான வெருகல் கங்கை பேரியாறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு வரையும் பரந்து நீண்டு கிடக்கும் இந்நாட்டின் தனிப்பட்ட பண்பாட்டுப் பாரம்பரியம் தனித்துவம் பொருந்தியதாக காணப்பட்ட போதும் அவை முறையாகவும் தெளிவாகவும் எழுதிவைக்கப்படவில்லை. சுமார் 130 மைல் நீண்டு கிழக்கு மேற்காய் முறையே நெய்தலும், மருதமும், முல்லையும், குறிஞ்சியும் அணிபெற அமைந்து ஏறக்குறைய 70 மைல் அகன்று கிடக்கும் இந்நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம் தொகுத்து வெளியிடப்படவேண்டியதன் அவசியம் இன்று நமது நாட்டின் அறிஞர் மத்தியில் சுடர் விடத்தொடங்கியுள்ளது.

மட்டக்களப்பு - சேரநாட்டுப் பண்பாடு, இந்துசமயப் பண்பாடு, சமயசமரசப் பண்பாடு, சாதிப் பண்பாடு, தொழிற் பண்பாடு, ஒழுக்க முறைப்பண்பாடு, நாட்டுப்பாடல் பண்பாடு, வடசேரிப் பண்பாடு, சமூக பொருளாதாரப் பண்பாடு, சட்டதிட்டப்பண்பாடு, கலை கலாசாரப் பண்பாடு, மொழி இலக்கியப் பண்பாடு என்று பல்வேறு கோணங்களில் பல்துறை நிபுணர்களாலும் நமது நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம் ஆராயப்பட்டு நமக்கென்று உள்ள தனிப்பட்ட பண்பாடு தெளிவாக்கப்படல் வேண்டும். பிறநாட்டாரும் அதன் பெருமை சிறப்பு கண்டு போற்றிப் புகழவேண்டும்.

மட்டக்களப்புத் தமிழரின் வரலாற்றுப் பண்பாட்டுக்குத் தமிழ்நாட்டுத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் தொடர்புகளும், இஸ்லாமியர் சிங்களவர் தொடர்புகளும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் தொடர்புகளும் முறையாக ஆராயப்பட்டுப் பிறநாட்டாரின் தொடர்புகளால் எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில், ஏற்பட்ட தாக்கத்தினை அறிய வேண்டும். இது வரை காலமும் மட்டக்களப்பு பற்றி ஒரு சில நூல்களே வெளிவந்துள்ளன. மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்புத் தமிழகம், மட்டக்களப்பு வசந்தன், கவித்திரட்டு, மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் முதலிய நூல்களும், நாடு காட்டுப் பரவணிக் கல்வெட்டு, முக்குவர் ஏற்பாடு முதலியனவுமே வெளிவந்துள்ளன. இதனைத் தொடர்ந்து மாகோன் ஏற்பாடு, கண்டியரசன் ஏற்பாடு என்பனவும், தேசவளமைப் பத்திகளும் வெளிவர வேண்டும். அவ்வாறு வெளிவந்தால் தான் நமது வரலாற்றுப் பண்பாட்டின் பாரம்பரியத்தை தெளிவாக அறிந்து கொள்ள நமக்கு வாய்ப்புண்டாகும்.

எஸ். எதிர்மன்னசிங்கம்
உதவிப்பணிப்பாளர், கலாசார அலுவல்கள்

சமுக பண்பாட்டிலே பிறப்புத் தொடக்கம் மரணம் வரை நாம் பல தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டுள்ளோம். இங்கு வருடம் தோறும் படிக்கப்பட்டு வரும் எண்ணெய்ச்சிந்து, கண்ணகை இலக்கியங்கள் முதலியவற்றில் இது பற்றிக் குறிப்புக்கள் நிறைய உண்டு. தென்சேரி, வடசேரிப் பண்பாடு கண்ணகை இலக்கியங்களா

லும், கொம்பு விளையாட்டு, போர்த்தேங்காய் அடித்தல் முதலான கண்ணகை வழிபாட்டு விளையாட்டுகளாலும் சொல்லப்பட்டு வந்தாலும் சிங்கள மக்களிடையே உடபில, யடபில என்னும் பத்தினி வழிபாட்டுப் பண்பாட்டுடன் தொடர்புறுத்தி ஆராயப்படுதல் வேண்டும். வடசேரி, தென்சேரி முறைபோன்றே நமது நாட்டுக்கூத்திலும் வடமோடி தென்மோடி என்ற பிரிவுகளும் உண்டு.

சாதிப்பண்பாட்டுப் பாரம்பரியத்தினை பூரணமாக அறிந்துகொள்ள குடிக்கல் வெட்டு, பெரிய கல்வெட்டு, பங்கு கூறும் கல்வெட்டு, தாதன் கல்வெட்டு, போடி கல்வெட்டு, சாதித் தெய்வக்கல்வெட்டு, ஆசாரிகள் கல்வெட்டு, சீர்பாதகுல வரலாறு, முக்குவர் வன்னிமை, திருப்படைக்களஞ்சியம் முதலானவை எமக்குத்துணையாகுகின்றன. இதனோடு குளக்கோட்டன் கல்வெட்டு, கோணேசர் கல்வெட்டு, ஆகியனவும் சேர்த்து ஆராயப்படல் வேண்டும்.

சமய பண்பாடு தொடர்பாக சமயாசாரங்களை நாம் அணுகும் போது கண்ணகை வழிபாடு, வதனமார் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, முருக வழிபாடு என்பவற்றுடன் நமது சமயச்சடங்குகளான சர்க்கரை அமுது கொடுத்தல், தண்ணீர் சோற்றுப்பள்ளையம் முதலானவையும் விரிவாக ஆராயப்படல் வேண்டும். அத்தோடு இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த மத வழிபாடுகளிலும் நமது பண்பாட்டுப் பாரம்பரியம் எந்தளவு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். நாம் இந்துக்களாகவும், ஏனையோர் தத்தம் சமயத்தில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருந்தபோதும் பொதுவாக நாமெல்லாரும் சமயசமரச மனப்பான்மை மிக்கவர்களாய் இருக்கிறோம். இதற்கு வேதாந்த வழிமுறைகளைக் கொண்ட இராமகிருஷ்ண போதனை காரணமாய் இருக்குமா?

ஒழுக்க முறைப்பண்பாட்டிலே நாம் சாதி சமய ஒழுக்கம், சில தனித்துவ அனுட்டானங்கள், நடையுடைபாவனைகள் என்பவற்றைக் கடைப்பிடிப்பவர்களாய் இருக்கிறோம். சகுனம் பார்த்தல், சாத்திரம் கேட்டல் முதலானவை எல்லாம் எம்மிடமும் உண்டு. சட்டதிட்டப் பண்பாடுகளுக்கு முக்குவச் சட்ட வழமைகளும் மருமக்கள் வழி உரிமைகளும், சீதனமுறை வழக்கங்களும் நிறைய எம்மிடமுண்டு. உரோமன் டச்சுச் சட்டமும் எமக்குப் பல வழிகளிலும் உதவுகின்றன. சோதிடம், மாந்திரீகம் வைத்தியம், மனையடிசாஸ்திரம் முதலானவை நமது பண்பாட்டுப்பாரியங்களுக்கென்று சில வரையறைகளைத் தருகின்றன. இவை நமது கலை கலாசாரப் பண்பாட்டுக்குப் போதுமானது. நாட்டுக்கூத்து வகைகளும், நாட்டுப்பாடல் முறைகளும் குலவை போடுதல் வசந்தன், பிள்ளையார் கட்டை, கிட்டிப்புள்ளு விளையாட்டு முதலானவையும் தமக்கே சிறந்த கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களாகும்.

வாய்மொழி இலக்கியங்களைத் தாராளமாகக் கொண்ட நாம் மொழி இலக்கிய பண்பாட்டிலும் தனிச்சிறப்புடையவர்களாய் விளங்குகின்றோம். நமது நாட்டிற்கே உரியதான கண்ணகை அம்மன் காவியமும, எண்ணெய்ச் சிந்து, கத்து நாடகங்கள் குளுத்திப்பாடல்கள், தோத்திரம், பிரார்த்தனை என்பனவெல்லாம் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நாம் பாதுகாத்துப் பேண வேண்டாமா?

திருமண வீட்டிலே மாப்பிள்ளைக்கு கொடுக்கும் சீதனமுறைகள் ஏனைய நாட்டுப் பாரம்பரியங்களில்இருந்து முற்றும் வேறானது. பெண்ணுக்குத் தனியாக அன்றி மாப்பிள்ளைக்கு சேர்த்தே சீதனம் கொடுக்கப்படுகின்றது. பிள்ளைகள் இல்லாமல் மனைவி இறந்தால் சீதனம் முழுவதும் மாப்பிள்ளைக்கும், பிள்ளைகளைப் பெற்று மனைவி இறந்தால் சீதனச் சொத்து பிள்ளைகளுக்கும் சேரும். மனைவியும் கணவனும் திருமண முறிவு ஏற்படுத்தும் போது சீதனச் சொத்து இரண்டாகப் பிரிபடுகின்றது. இது யாழ்ப்பாணச் சீதனமுறைகளில் இருந்து முற்றிலும் வேறானது. ஒரு திருமணத்தை நடத்தி முடித்தால் பெண் வீட்டாரே மகளுக்கு வீடு, வளவு முதலியவற்றைக் கொடுத்து உதவுவதோடு மாப்பிள்ளையைச் சீதனவீட்டிலேயே வைத்துக் கொண்டு ஆறு மாதம் சோறு கொடுக்கும் வழக்கமும் முதற்பிரசவம் (கருமாதி செய்தல்) பார்த்தலும் சீதனக் காணியை முதன் முதல் விதைத்து வெட்டிக் கொடுத்தலும் இங்குள்ள தனிப்பட்ட பண்பாட்டு பாரம்பரியமே. இது முக்குவ வழமைகளில் மிகவும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. இப் பாரம்பரியம் இங்குள்ள இஸ்லாமிய சகோதரர்களிடமும் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மருமகள் கர்ப்பிணியாக இருக்கும் போது மாமியார் வீட்டார், மச்சாள்மார் கர்ப்பிணிக்குக்

கொளுக்கட்டை கொண்டுபோகும் மரபுவழிப் பாரம்பரியத்தையும், ஆண் குழந்தை பிறந்தால் வீட்டுக்கு மேலால் உலக்கை எறிதலும் பெண் குழந்தை பிறந்தால் ஈர்க்கு கட்டு எறிதலும் முதலான பாரம்பரியத்தினையும் கொண்ட நம் மிடையே கூரை தட்டிக் குரல் எழும்பும் யாழ்ப் பாண மரபுமுறை இருப்பதாகத் தெரியவில்லை. மேற்கூறிய சில பாரம்பரியம் இன்றைய நமது சமூக வழக்க மாற்றத்தால் மாறிக் கொண்டு போனாலும் கிராமப்புறங்களில் இன்றும் இதனைக் காணலாம். பல குழந்தைகள் அரசினர் வைத்தியசாலைகளில் பிறப்பதாலும், பல வீடுகள் உயரமாகவும், ஓடு கொண்டு அல்லது அஸ்பெஸ்ரோ சீற் கொண்டு வேயப்பட்டிருப்பதாலும் உலக்கை எறிவதில் சில சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. சிலவேளை அடுத்த வீட்டாரின் வீட்டிலோ வீட்டாரிலோ விழுந்து விட்டால் என்ன செய்வது இதனால் ஒரு சில நமது பாரம்பரியத்தைக் கைவிட வேண்டியதாய் விட்டது.

கண்ணூறு, நாவூறு, காற்றணவு பார்க்கும் மரபு வழிப் பாரம்பரியம் இன்றும் நமது தாய் மாரிடம் உண்டு. குழந்தைகளை மாலை நேரத்தில் வெளியில் கொண்டு செல்ல மாட்டார்கள். பட்சிகள் எச்சம் படலாம்என்றும், பேய் பிசாசுகளின் பார்வை ஏற்படலாம் என்றும் கூறுகின்றார்கள். குழந்தைகளுக்கு காற்றணவு ஏற்பட்டால் குதிரை லாடம் போன்ற இரும்பை நெருப்பில் காய்ச்சி நீரினில் அதனை தோய்க்கும்போது அந்த நீர் குழந்தையின் முகத்தில் சீறியடிக்கும் போது ஏற்படும் உணர்வு அல்லது ஒலியினால் அந்த நோய் மாறும் என்று நம்புகின்றார்கள். இதற்காக இரும்பினை அடுப்பிற்குள் போடும் போது அங்கே கண் சிரட்டை, செங்கல், மண், அல்லது முச்சந்தி மண், முக்கூரை வைக்கோல், காய்ந்த மிளகாய், உப்பு என்பவற்றை அடுப்பிற்குள் போடுகின்றார்கள்.

கண்ணூறு, நாவூறு ஏற்படாமல் இருக்க் குழந்தையின் முகத்தில் சிறியதொரு கறுத்தப் பொட்டு இடுவார்கள் அதற்கும் மிஞ்சிக் கண்ணூறு ஏற்பட்டு விட்டால் திருநீறு (துண்ணூறு) ஓதிக்கொடுப்பார்கள் அல்லது தண்ணீர் ஓதி மந்திரித்துக் கொடுப்பார்கள்.

பெண் குழந்தை (முக்குவ மரபில்) பிறந்ததும் தாய்க்கு ஒத்தாசைபுரிய முறை மச்சாளே வருவாள். குழந்தையைக் குளிப்பாட்டி சாணைச் சீலை போடும்போது இதுக்கு எனது இன்ன மகன் தான் மாப்பிள்ளை எனக் கூறி சாணை குறி போடுவாள். அது வளர்ந்து பூப்படைந்ததும் முதல் முதல் முறை மச்சாளுக்கே சொல்லி அனுப்பப்படும். அவளும் தாயும் ஆலோசித்து உறவினர்க்கு சொல்லி அனுப்புவார்கள். தண்ணீர் வார்க்கும்போது முதலாவது குடம் தண்ணீர் ஊற்றும் உரிமை முறை மச்சாளுக்கே உண்டு. பாளை வெட்ட குறிப்பிட்ட மாப்பிள்ளைக்கே உரிமை உண்டு. இதே போல நமது மட்டக்களப்பு தமிழகத்தில் நடக்கும் மரணச் சடங்குகளிலும் முக்குவ மரபு வழமைகள் அதிகமாக கலந்து உள்ளன. மணநாளிலோ அல்லது பெண் பிள்ளையின் பூப்பு நாளிலோ கூரை முடி கட்டும் முறையும், குலவை போடுதலும் நமது நாட்டிலேதான் உண்டு. மாப்பிள்ளையை முழுக வார்க்கும் உரிமையும் கால் கழுவும் உரிமையும் முறை மச்சானுக்கும், மணப் பெண்ணை குளிப்பாட்டும் உரிமை முறை மச்சாளுக்குமே உண்டு. திருமணம் முடிந்ததும் மாப்பிள்ளை பெண் வீட்டிலே தங்குதல் நமக்குள்ள சிறப்பான பண்பாட்டுப் பாரம்பரியமே. மரணித்த உடலை எரிக்கும் வழக்கம் அன்றிப் புதைக்கும் வழக்கமே எம்மிடம் அதிகமாக உண்டு. இது நமது நாட்டுச் சூழலுக்கும் வசதிக்குமாக அமைந்திருக்கலாம் போலத்தெரிகின்றது.

இவ்வாறு நமது நாட்டிலே தனிப்பட்டபண்பாட்டுப் பாரம்பரியங்கள் நிறைய உண்டு. இவை அனைத்தும் குழந்தைபிறப்பு தொட்டு திருமணம் குடும்ப வாழ்வு, மரணம் வரை ஒவ்வொரு நிகழ்ச்சியாக முறையாக ஆராயப்பட வேண்டியதாகும். குறிப்பாக மருங்கை கொடுத்தல், இரும்புக் காப்பு அரைஞாண் பூட்டுதல், முறுக்கு நூல் போடுதல், பிட்டுக்கழி கொடுத்தல் என்பன தொடர்பாக எல்லாவற்றையும் ஒரு சிறிய கட்டுரையில் அமைத்துக் காட்ட முடியாதென்றும், விரிவஞ்சியும் இத்துடன் விடுக்கின்றோம்.

# செந்தமிழும் புதுப்புனைவும்

தமிழ்மணி ந. பாலேஸ்வரி

'செந்தமிழும் புதுப்புனைவும்' என்னும் பொருள் பற்றி இதுவரை பலர் ஆராய்ந்திருப்பர் எனினும் இதுபற்றி ஆராய்ந்து சிறிது எழுதலாம் என யானும் முன்வந்துள்ளேன்.

இத்தொடரில் செந்தமிழ், புதுமை, புனைவு என்னும் மூன்று சொற்கள் உள. இவற்றுள் செந்தமிழ் இன்னதென்பதைப் பெரும்பாலோர் அறிவர். கொடுந்தமிழ் அல்லாதது, கொச்சைத் தமிழ் அல்லாதது செந்தமிழ் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

செந்தமிழிற் புதுப்புனைவு இன்றியமையாமையினையுணர்ந்து புதியன புனைந்தோர் 19ம் நூற்றாண்டிற் பலர் இருந்தனர். இவற்றுள் நாவல் (Novel) எனப் பெயரிய புதுக் கதைகளும் சிறுகதைகளும் பல்கிய காலம் 19ம் நூற்றாண்டும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் எனலாம்.

நாவல் வெள்ளத்தின் உற்பத்தியை நினைக்கும் பொழுது வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரிதை, இராஜாம் ஐயர், கமலாம்பாள், திருக்கோணமலை தி. த. சரவணமுத்துப் பிள்ளையின் மோகனாங்கி, மாதவையர் பத்மாவதி, சின்னையாபிள்ளையின் வீரசிங்கன் கதை என்பன நினைவுக்கு வருகின்றன. இவை செந்தமிழ் நடையின. இவற்றைத் தொடர்ந்து கொடுந்தமிழின் குடியிருப்பும் சிருங்காரரஸ செல்வம் நிறைந்த நாவல்கள் பலவும் புற்றீசல் போலப் புறம்போந்து பொதுமக்களின் புத்தியையும் இளைஞர் கருத்தினையும் பாழ்படுத்தியதும் உண்டு. மேலும் இவற்றைச் சார்ந்து எழுந்தன சிறுகதைகள்.

சிறுகதைகளின் உற்பத்தியை எண்ணும் போது இதோபதேச பஞ்சதந்திரக்கிளைக் கதைகள், கீதாமஞ்சரி, கதாசிந்தாமணி முதலியவற்றை நினைவு கூறாமல் இருக்க முடியாது.

இந்தியாவில் கமலாம்பாளை வெளியிட்ட விவேகசிந்தாமணி பத்திரிகையில் பல சிறுகதைகள் கலை வல்லுநரால் எழுதப்பட்டன. பின்னர் செந்தமிழ் சிறுகதைகட்கு அடிகோலியவர் செந்தமிழ் நடைகைவந்த மாதவையர் ஆவர்.

ஈழநாட்டில் சிறுகதைக்கு அடிகோலியவர் அருங்கலை விநோதர் ஆணல் சதாசிவம்பிள்ளை யாவர். அவர் எழுதிய கதைகளைத் தேடிப் பதிப்பித்தல் சாகித்திய மண்டலத் தொண்டுகளில் ஒன்றாகலாம்.

ஆயினும் ஆங்கிலமொழி பெருவழக்காக வந்தபின்பே நாவலும் சிறுகதையும் நற்றமிழில் நடமாடின.

புதியது புனைவதைப் புந்தியிற் கொள்வோம்.

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

என்றான் பாரதி. ஆனால் அவை வந்துள்ளன- வருகின்றன-வரும் என்பதில் சந்தேகமில்லை.

நற்றமிழ் நாவல்கள் இன்னும் வெளிவர இடமுண்டு. சிறுகதை வளமும் பெருக இடமுண்டு. இப்பொழுது நாவல் அமைப்பினைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

நாவல் என்பது நவீனம் என்று கூறப்படும் ஒரு கதையைக் குறிக்கும். 'ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். முன்னொரு காலத்திலே என்றவாறு ஆரம்பிக்கும் பழங்கதை போலன்றி 'மாலை ஐந்து மணியிருக்கும் திருக்கோணமலைக் கடற் கரையிலே புத்தாடை புனைந்த புன்முறுவல் பூத்த பூவையர் ...... என்று திடீர் எனக் கதையினை இடையில் ஆரம்பித்து துண்டுதுண்டாகக் கதையின் சந்தர்ப்பங்களையும் சந்திகளையும்

உத்திகளையும் சேர்த்துக் கதையை எழுதி முடிப்பதே நாவல் எனப்படும். இதற்கு ஆங்கிலேயர்களே நமக்கு முதன்முதலில் வழிகாட்டியவர்களாவர். மேல்நாட்டவரின் கூட்டுறவு பெற்ற பின்னரே நம் தேசத்தில் இத்துறையில் எம் நாட்டவர் இறங்கலாயினர்.

நாவல் எழுதும் ஆசிரியர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்கத்தைக் கொண்டே எழுத ஆரம்பித்தனர். பெரும்பாலோர் (Scot)ஸ்கொட், (Hugo) ஹியூகோ என்போரின் கதைகளைத் தழுவியே எழுத ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் கதைப்போக்கில் வாசகர்களின் கவனத்தை ஈர்ந்து அவர்களை வியப்புறச் செய்ய வேண்டும் என்னும் கருத்துடனேயே நாவல் இலக்கியம் தோன்றியது.

கதையின் முடிவு இப்படியாக இருக்கும் என்று முன்கூட்டியே வாசகர்கள் கிரகித்து தீர்மானிக்க முடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாகக் கதையை எழுதிச் செல்வதே நாவலின் சிறப்பம்சமாகும்.

நாவல்களிலே சாதாரணக் கதைகள் என்றும் துப்பறியும் கதைகள் என்றும் வரலாறு சமயரகமானவையென்றும் ஒழுக்கம் பற்றினவென்றும் பலவகையுண்டு. மேலும் கதை இன்பத்தில் முடிவன துன்பத்தில் முடிவன எனவும் இருவகைப்படும்.

எமது நாட்டில் பல கதைகள் இன்ப நிகழ்ச்சியுடன் முடிவுற்றன. சில கதைகள் துன்ப முடிவுடையதாயின் அவற்றை இன்பியல் முடிவுடைய தாக்கி விடுவர். அது பண்டைய முடிவு. துன்ப முடிவுடன் கதையை எழுதுவது தோஷம் என்பது முன்னோரின் கொள்கை போலும். தற்போது இக்கொள்கை மறைந்து பெரும்பான்மையான கதைகள் காதல் ரஸமும் அவலச் சுவையும், வீரச்சுவையும் அமைவனவாகக் காணப்படுகின்றன.

ஆங்கிலத்திலும், வங்காள மொழியிலும், ஹிந்தியிலும், ஆந்திரத்திலும், துன்பகரமான முடிவையுடைய பல கதைகள் வெளிவந்துள்ளன. தமிழிலும் சிறுபான்மையோர் இத்துறையில் இறங்கிய முறையால் நாவல்கள் எழுதுவதன் நோக்கம் தற்போது உலக அனுபவங்களை ஒருங்கு திரட்டிக் கொடுப்பதாகும். உலகில் பல நிகழ்ச்சிகள் துன்பமாய் முடிவடைகிறது. என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டி எச்சரிக்கை செய்யும் வகையில் நாவல்கள் எழுதுவது வேண்டற்பாலதும் பயனுடையதுமாகும்.

பழங்கதைகள் பெரும்பாலும் ஒரு அரசனையோ பிரபுவையோ கதாநாயகனாய் வைத்தே எழுதப்பட்டன. தற்கால நாவல்களோவெனில் சாதாரண மக்களின் வாழ்க்கையும், சுவைதரக் கூடியதாய் நடைபெறுகிறதென்பதையும், பொது ஜனங்களின் வழக்க ஒழுக்கங்கள் இப்படிப்பட்டவை என்பதையும், விபரித்துக் காட்டும் வகையில் சாதாரண மக்களை கதாநாயகர்களாகக் கொண்டு எழுதப்படுகின்றன. தற்கால நாவல்கள் தொழிலாளி தொடக்கம் முதலாளி வரையில் உள்ள எல்லா மக்களுடைய வாழ்க்கையையும் வர்ணிப்பனவாய் வாசகர்கள் அவரவர் நிலைக்கேற்ப அவரவர் அனுபவங்களைத் தாமே அனுபவித்து மகிழும்படி எழுதப்படுகின்றன.

தற்கால நாவல்களில் பலவித கற்பனைகள் சேர்க்கப்பட்ட போதும் அவை உலகில் இயல்பாக நடக்கக் கூடிய சம்பவங்களாகக் காட்டியே வர்ணிக்கப்படுகின்றன. இதனால் வாசகர்கள் தாமும் அதுபோல் நடக்க முடியும் என்ற எண்ணம் உள்ளத்தில் பதியும்.

தற்கால கதாசிரியர்கள் தாம் எழுதும் கதைகளின் மூலம் தம்மிடமுள்ள சீர்திருத்தக் கருத்துக்களை வாசகர்களின் மனதில் ஊன்றிப் பதிய வைக்கின்றனர்.

ஒரு சிலர் தாமும் கதை எழுதியதாக இருக்கட்டும் என்றும் பணம் கிடைத்தாற் போதும் என்றும் எண்ணி மொழிக்கும் நாட்டுக்கும் தீங்கிழைக்கும் வகையில் ஆபாசக் கருத்துக்களை வைத்து நாவல் எழுதி வெளியிடுகின்றனர். இதனாலேயே நாவல் படித்துக் கெட்டுப் போகிறார்கள் என்ற கருத்து பெரியவர்களிடையே பரவி வருகிறது.

கதை உள்ளத்தைக் கவர்ந்து செல்ல வேண்டும். சிலர் நாவல்களில் கம்பன் சீதையை வர்ணித்தது போலவும் அதிவீரராம பாண்டியன் தமயந்தியை வர்ணித்தது போலவும் ஆண்களையும் பெண்களையும் இங்கே பெரும்பாலும் பெண்களையே படிப்போர் வெறுக்கும்படி வர்ணிக்கின்றனர். சுருங்கக் கூறி விளங்க வைத்தல் என்றபடி எழுதுதல் நலம்.

இதுவரை நாவலின் பொது இலக்கணம் பற்றிக் கூறப்பட்டது. இனித் தமிழ் நாவல்கள் பற்றிச் சிறப்பு வகையில் இரண்டொரு விடயங் களைக் கூறலாம் என நினைக்கிறேன்.

ஒரு கதையின் கதாநாயகன், நாயகியே முக்கிய பாத்திரங்களாக இருப்பதால் அவர்களை அறிவிலும் அழகிலும் ஆண்மையிலும் மிகுந்த வர் எனக்காட்டி எழுதுவது உலக வழக்கம்.

ஆயினும் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை ஒரு சிறிதும் மாறுதல் இன்றிப் பாத் திரங்களைப் படைத்தல் சுவைதரா. ஆகவே ஒரு கதாநாயகன் அல்லது கதாநாயகி பொறுமையுள்ளவராகக் காட்டப்பட்டபோதும் பொறுமையிழக்கும் சந்தர்ப்பங்களும் வரக்கூடி யதாக எழுதுதல் நலம்.

எமது சமயம், பண்பாடு, நாட்டுநலம் இவற்றை வளர்ப்பனவாகக் கதைகள் அமைதல் நலம்.காதலும் கன்னியும் இல்லாக் கதை கவர்ச்சி யற்றதாய் இருக்குமாதலால் பொய்க்காதலால் வரும் கெடுதிகளை நிகழ்ச்சிகள் மூலம் அறிவுறுத் தல் நலம். பெண்களிடம் பதிபக்தி, கடவுள் நம்பிக்கை, ஆடம்பரமற்ற தன்மை என்பவற்றை வளர்க்கச் செய்தல் வேண்டும்.

பொதுவாகத் தமிழரின் சமுக வாழ்க்கை யைச் சீர்திருத்தி ஒற்றுமை, உண்மை, அன்பு, வீரம், ஒழுக்கம், நாட்டுப்பற்று என்பவற்றை வளர்க்கும் வகையில் நாவல்கள் எழுதப்பட வேண்டும். இப்படியான இலக்கியங்களே என் றும் நிலைக்கக் கூடியன.

**சத்தியத்தின் தன்மை மிக உயரியது, அளவிடற்கரியது, யாகமும் தவமும் அதனோடு ஒப்பிட முடியாது. ஒரு சமயம் ஆயிரம் அசுவமேத யாகங்களின் புண்ணியத்தை தராசின் ஒரு தட்டிலும், சத்தியத்தை மற்றொரு தட்டிலும் வைத்து நிறுத்த போது, அந்த யாகங்களைக் காட்டினும் சத்தியமே அதிக பாரமாக இருந்தது.**

- பாரதம்

# எமது கலைஞர்களின் அவலங்கள்

**எஸ். பற்குணம்**
*பிரதிச்செயலாளர்,*
*உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு*

இன்று எமது கலைஞர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக விறகு வெட்டுகின்றார்கள். விறகு வெட்டி வாழ்வது இழிந்த செயலல்ல. ஆனால் ஒரு நாகரிகமான சமுகம் ஒரு கலைஞனை விறகு வெட்ட வைப்பது, ஒரு இழிவான செயலாகும். தன்னையே மறந்து கலையில் மூழ்கிப் போகும் கலைஞர்கள், இன்று கலையை மறந்து, தாம் வாழ வேண்டுமென்பதற்காக விறகு வெட்டி வயிறு வளர்க்கின்றார்கள். இந் நிலை தொடருமானால் எமது அழகியற்கலைகளின் அழிவு வெகு தூரத்தில் இல்லை என்பது எல்லாராலும் அறிந்து கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

கவிதை, பாட்டு, நடனம், சிற்பம், நாடகம் கட்டிடம் போன்ற அழகியற்கலைகளால் ஆயிரங் காலத்துப் பயிராக ஓங்கி வளர்ந்து, உயர்ந்து நின்றது, எமது நாகரிகம். பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது கலைஞர்கள் ஏழைகளாக இருந்தார்கள். கூழுக்கு பாடினார்கள்; அரசரிடம் உண்டபின் பொருளும் பரிசும் கொண்ட பின் ஆற்றுப்படை கூடப் பாடினார்கள். தமக்கு ஆற்றாமை ஏற்பட்டபோது அவமானம் ஏற்பட்டபோது அறம்பாடி தமது வேதனையையும் விரக்தியையும் கொட்டித் தீர்த்தார்கள். ஆனால் இன்றைய நிலையைப் போல கலைஞர்கள் அதள பாதாளத்தில் தள்ளி விடப்பட்டிருக்கவில்லை. கலைஞர்களை வறுமை வாட்டுகின்றது. அவமானம் ஆக்கிரமிக்கின்றது. சமுதாயத்தை ஆக்கிரமித்து வழிநடத்தும் கலைஞர்கள் சமுதாயத்தால், ஆக்கிரமிக்கப்பட்டு ஒடுங்கி வாழ்கின்றார்கள்.

எமது நாதஸ்வரக் கலைஞர் ஒருவரின் மகன் அக் கலைஞன் முன்னாலேயே ஆயுதம் தாங்கியவர்களால் துடிக்கத் துடிக்கக் குத்திக் கொலை செய்யப்பட்டான். அக் கலைஞனின் இதயத்திலிருந்து இனிய ராகங்கள் எழுந்தோடி வருமா?

இன்னொருபோது வவுனியாவில் எமது கலைஞர்கள் ஆயுதந்தாங்கியவர்களால் வழி மறிக்கப்பட்டு தம்மை அடையாளம் காட்ட வேண்டி நடுவீதியில் அமர்ந்து, நாதஸ்வரக் கச்சேரி செய்யவேண்டியேற்பட்டது. அவமானப் படுத்தப் படுவதற்கு எல்லையே இல்லை என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆனால் இச் செயலை யாரும் கண்டித்ததாகவும் இல்லை. கண்டுகொண்டதாகவும் இல்லை. இத்தகைய அவமதிப்புக்கள் தற்போது எமது கலைஞர்களைத் தொடர்ந்துகொண்டு, தொந்தரவு கொடுத்துக் கொண்டு இருக்கின்றன.

**இன்று எமது கலைஞர்கள் வற்புறுத்தலுக்காக தமது கலைச்செழிப்பை அடகு வைக்கின்றார்கள். வாழ்ந்துதான் ஆகவேண்டுமென்பதற்காக தமது கலைக் களஞ்சியங்களை எவனெவனுக்கோ விற்றுப் பிழைக்கின்றார்கள். கலைஞன் சுதந்திரமாக வாழ விடப்படவேண்டும். என்ற சித்தாந்தம் அழிந்து விட்டது. மாறாகக் கலைஞனைச் சுதந்திரமாக நடமாடவிடக் கூடாதென்பது வாழ்வியல் நிலையாகி விட்டது. கலைஞர்களை வேவு பார்க்கும் சமுகத்தில் நாம் வாழ்வது ஒரு வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும்.**

**''நெற்றிக் கண்ணைக் காட்டினும்
குற்றம் குற்றமே''**

என்று ஒரு கவிஞன் ஆண்டவனையே பிழைகண்ட இலக்கியப் பரம்பரையைக் கொண்டவர்களா நாங்கள்? ''மன்னவனும் நீயோ'' வென மன்னனையே இகழ்ந்துரைத்த கவிஞர்களைக் கொண்ட பரம்பரையிலா நாங்கள் வாழ்கின்றோம்? மிலேச்சர் கூட்டத்திலேதான் நாம் வாழ்வதாகத் தோன்றுகின்றது.

கவிதை, சித்திரம் என்பன உருவத்தில் எழுத்தோடு, பத்திரிகையோடு சம்பந்தப்பட்டவை. அவை ஒரு மூலையில் தூங்கிக்கொண்டி

ருந்தாலும் எப்போதாவது விழித்துக் கொள்ளும். கலைஞர்களின் எழுத்துவடிவங்களால் அஞ்ஞாத வாசம் செய்யமுடியும் ஆனால் நாடகம், நடனம் பாட்டு, சிற்பம் என்பன கலைஞர்கள் வாழும் போதே உடன் வாழுபவை. மேடைக் கலைஞர்களுடை இறப்புடன், அவர்களின் அழகியற் கலையும் ஒய்ந்து விடுகின்றது. இராசரத்தினம்பிள்ளையின் மறைவுடன் 'தோடி'யும் ஓடி மறைந்ததாகக் கண்ணதாசன் பாடியுள்ளார். வைரமுத்துவின் மயான காண்டம் அவருடன் சிதையேறி விட்டது. இந்நிலையை நன்கறிந்தவர்கள் எமது கலைஞர்களை வாழும்போதே வாழவைக்கவேண்டும்.

கோவில் வீதிகளிலும், கலை அரங்குகளிலும், கேட்ட சலங்கை ஒலிகள் ஒலித்த இசை அலைகள் பார்த்த நவரஸங்கள் இன்று உறங்கிப்போய்க் கிடக்கின்றன. நாடகமேடைகளே இல்லை. நடிகர்களைக் காணவேயில்லை. அவர்கள் கசாப்புக் கடைக்குப் போயிருந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை. சமுகத்தை திசைதிருப்பி வழிநடாத்த வேண்டிய கலைஞர்கள் வழிமறிக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டு துகிலுரியப்பட்டு வீதியில் நிறுத்தப்பட்டுள்ளனர். கலைஞனால் இன்று நகர முடியவில்லை கலைஞன் தன்னைப் பாதுகாக்கவே முகபாவத்தைப் பயன்படுத்தும் பரிதாப நிலை எமது சமுகத்தின் சாபக்கேடு.

எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் சென்று நடனம் ஆடினார்கள்; இசை விருந்து படைத்தனர்; நாடகம் போட்டனர். மக்கள் மகிழ்ந்தனர் பணமும் பரிசும் தந்து புகழ்ந்தனர். உள்ளம் குளிரக் கலைஞர்களை வாழ்த்தி வரவேற்றனர். வழியனுப்பினர். சாதாரணமான உரையாடலிலே இன்று பிழைகண்டு நச்சரிக்கின்றார்கள். அப்படியாயின் நாடகங்கள் எம்மாத்திரம்? நகைச் சுவைக்காக கூறும் சாதாரண வார்த்தைகள் கூட நடிகர்களுக்கு மரண பயத்தைத் தருகின்றன. நாடகம் எப்படி வளரும்? நடிகன் எப்படி வாழ்வான்.

எமது கலைஞர்கள் மறந்தும் புலி, சிங்கம் போன்ற மிருகங்களின் பெயரை உச்சரிக்கக் கூடாது. ஈழம் என்ற சொல் இன ஒற்று என்ற தொடர் தவிர்க்கப்பட வேண்டிய வார்த்தைகளாம், கலைஞன், தான் கற்றதை கற்பனையில் காண்பதை கற்பிக்க எண்ணுவதை பயமின்றிக் கூற அவனுக்கு முழுச் சுதந்திரமும் வழங்கப் படவேண்டும். கலைஞனின் உணர்வுகளுக்கும் உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும் அணை இருக்கக் கூடாது. பல மக்கள் தலைவர்கள் தம்மைப் பற்றி வரைந்த கேலிச் சித்திரங்களைச் சேகரித்து வைத்து ரசிப்பார்கள். அதை வரைந்தோர்களை அழைத்து விருந்தளித்துப் பரிசளித்து கௌரவித்தும் உள்ளார்கள். கேலிச் சித்திரத்தின் பண்பை, பலத்தை, சமுக முக்கியத்துவத்தை அறிந்த பண்பட்ட தலைவர்களாலே தான் அதை ரசிக்க முடிந்தது. இன்று கேலிச் சித்திரம் வரைபவர்கள் தூரிகையை வீசிவிட்டனர். இதனால் கலைஞனுக்கு ஏற்பட்ட இழப்பை விட, சமுகத்துக்கு ஏற்பட்ட இழப்பே பெரியது.

எமது கலைஞர்கள் தமது கலையை மறந்து கொண்டிருக்கின்றார்கள்; திறமை இழந்து கொண்டிருக்கின்றார்கள். மனவிரக்தி அவர்களை விழுங்கிக்கொண்டிருக்கின்றது. அவர்கள் கலைஞர்களாக ஊர்வலம் வந்தபோது அளிக்கப்பட்ட கௌரவம் அற்றுப்போய்விட்டது. அவர்களுக்கு வேறு தொழில் தெரியாததால் வேறு வருமான வழிகள் இல்லாததால் சாதாரண பிரஜை என்ற நிலையிலிருந்து மேலும் தாழ்ந்துபோயுள்ளனர். ஒரு கலைஞனால் ஒரு கோவிலின் குருக்கள் போல ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு சிறு தொகையைப் பெற்றுக்கொண்டிருக்க முடியாது. உண்டியல் போட்டு காசு தண்டமுடியாது. உயர்ந்த ஒரு ஸ்தானத்திலிருந்து மிகக் கீழே வந்து கலைஞன் மலினப்படமாட்டான். பெண் கலைஞர்களைப் பொறுத்தவரை குறிப்பாக நடனம் சிதறிப் போய்விட்ட பூமாலையாகவுள்ளது. எமது புனிதமான கலைகள் - எமக்கு வழிகாட்டிய கலைகள் - இதுவரை காலமும் போற்றி பாதுகாத்த கலைகள் - பாதுகாக்கப்பட வேண்டுமானால். - எமது கலைஞர்களை நாம் பாதுகாத்தே ஆகவேண்டும். கலைஞர்களைப்பாது காக்காமல், கலைகளைப் பாதுகாக்கமுடியாது.

# மேற்குலகு நாடுகளில் தமிழ்ச் சஞ்சிகைகள் - ஓர் ஆய்வு

தாகம் வி. மைக்கல் கொலின்
(முகாமைத்துவ பீடம்)
கிழக்குப் பல்கலைக் கழகம்

1980 களிற்குப் பின்னர் ஈழத்தில் ஏற்பட்ட பல்வேறு சமுக, அரசியற், பொருளாதார காரணிகளினாலும், தீவிரத்தன்மை பெற்ற ஈழ விடுதலைப் போராட்டச் சூழலின் பரிமாணத்திற்கு, ஈடு கொடுக்க முடியாமலும், ஏன் ஒருவித தப்பிக்கும் மனப்பான்மையிலும், ஈழத்திலிருந்து வெளியேறி உலகின் பல பாகங்களிலும் வாழும், ஈழத்தமிழர்கள் மத்தியில் இருந்து உருவாகும் இலக்கியம் இன்று தமிழ் இலக்கிய பரப்பில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இவ்வகையான இலக்கியங்களுக்கு "புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் இலக்கியம்" என்று பெயர் சூடி ஆய்வு செய்யக் கூடிய அளவிற்கு வெளிநாடுகளில் இலக்கிய முயற்சிகள் தீவிரம் பெற்று வருகின்றன.

எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து இன்று வரை ஈழத்தமிழரில் கணிசமான தொகையினர் ஐரோப்பிய நாடுகளிலும், வட அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் சென்று தஞ்சமடைந்துள்ளனர். இந்த நாடுகளில் ஈழத்தமிழர் செறிந்து வாழும் இடங்களில் அந்நிய கலாச்சார சூழலுக்கு ஆட்பட்டு, தாய்நாட்டு கலாச்சார மரபுகளையும் உதறிவிட மனமில்லாமல் ஒருவித திரிசங்கு நிலையில் வாழும் மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து தமிழ் சமுதாயம் ஒருவிதமான கலப்புக் கலாச்சாரத்தை வளர்த்து வருகின்ற நிலையில், இவ்வகையான இலக்கிய முயற்சிகள் தமிழர்கள் மத்தியில், ஒரு புதுவிதமான கலாச்சார பின்னணியை தோற்றுவித்துக் கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை.

ஈழத்தில் கூட சஞ்சிகை வெளியீட்டுத் துறை மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், மேற்கு நாடுகளில் எப்படி? ஒன்றல்ல இரண்டல்ல அறுபதிற்கு மேற்பட்ட தமிழ் சஞ்சிகைகள் வெளிவர முடிகிறது என்றால் எமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது.

கருத்துச் சுதந்திரம்:

ஈழத்தில் இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ள சுதந்திரங்களுக்குள் கருத்துச் சுதந்திரம் முக்கியமானது. (இதில் அரசும், தமிழ் இயக்கங்களும் அடங்கலாகா.) ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பொறுத்த வரையில் சிந்தனையாளனாகவே இருக்கிறான். தனது சிந்தனைகளை அவன் வெளிக்கொணர முயற்சிக்கும் போது அதற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிக்கொணரவே விரும்புகிறான். அந்த வகையில் இன்று ஈழத்தில் சுதந்திரமான கருத்துக்களை வெளியிட முடியாத நிலையில், மேற்கு நாடுகளில் இருந்து கொண்டு சுதந்திரமாக தனது சிந்தனைகளை வெளியிட முடிகிறது இன்றைய நிலையில் ஈழத்தின் போராட்ட அனுபவங்களே சமகால இலக்கியமாக பரிமாணம் பெறமுடியும். அந்தவகையில் எமது தேசத்தின் இன்றைய அரசியற், சமுக, கலாச்சார, பிரச்சனைகளையும், ஏன் இயக்கங்கள் பற்றிய கருத்துக்களையும், அவன் துணிகரமாக எழுதுவதற்கு மேற்கு நாடுகளில் தரப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம் முக்கியம் பெறுகிறது. மேலும் புலம் பெயர்ந்த நாடுகளில் காணப்படும் நவீன வெளியீட்டுச் சாதனங்களின் உதவியுடனும், அந்தந்த நாடுகளின் கலாச்சார அமைப்புகளின் உதவியுடனும், பத்திரிகை சஞ்சிகைகளை வெளியிடுவது என்பது இவர்களுக்கு இலகுவாக இருக்கின்ற பட்சத்தில் இந்த சஞ்சிகைகளின் மூலம், நாட்டுக்கு நாடு புலம் பெயர்ந்திருக்கும் தங்கள் உறவினர்களுடன், நண்பர்களுடன், இலக்கியவாதிகளுடனும் ஓர் நட்புறவையும், தொடர்பையும், வளர்க்கவும், ஈழ போராட்ட சூழ்நிலையின் மறுபக்கத்தை புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும், இந்த முயற்சி உதவியாக இருக்கின்றது.

தோற்றமும் வளர்ச்சியும்:

எண்பதாம் ஆண்டுக்குப் பின்னர் கூர்மைப் படுத்தப்பட்ட இனப்பிரச்சனை காரணமாக தமிழ்ப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் குறிப்

பாக இளைஞர்கள் மேற்கைரோப்பிய நாடுகளுக்குச் சென்றனர். இவர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் கனடா, சுவிஸ்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் அரசியல் தஞ்சம் கோரினர்.

இப்படியாக வெளியேறிய இளைஞர்கள் மத்தியில் தாம் வெளியேறிய நாடுகளின் மொழி கலாச்சாரம், அரசியல் சமுகசூழல், சொந்த மண்ணின் அவலங்கள், என்பன இவர்களுக்கிடையே வாசிப்புத் தேவையை ஏற்படுத்தியது. குறிப்பாக மேற்கு நாடுகளுக்கு வெளியேறிய அநேகமான இளைஞர்களில் பலர் இயல்பாகவே தரமான வாசகர்களாகவும், இலக்கிய பிரியர்களாகவும், படைப்பாளர்களாகவும், கவிஞர்களாகவும், இருந்த காரணத்தினாலும் சிலர் தமது முன்னைய காலத்தில் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்ததினாலும் இவர்கள் இயல்பாகவே இலக்கிய தேடல் உடையவர்களாகவும், ஆர்வமுடையவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களே காலப்போக்கில் தமது சொந்த முயற்சியில், தனித்தனியாகவும் குழுக்களாக இணைந்தும் சஞ்சிகைகளை வெளியிடத் தொடங்கினர். தற்போது வெளிவரும் சஞ்சிகைகளின் தோற்றத்தை இப்பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

மேற்கு நாட்டு சஞ்சிகைகளின் தோற்றத்தை ஆராயும் போது மேற்கு ஜேர்மனியின் 'ஸ்ருகாட்' நகரிலிருந்து வெளிவரும் **'சிந்தனை'** எனும் சஞ்சிகை 1985ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ''தமிழ்மக்களின் இருள் சூழ்ந்த நிச்சயமற்ற நிகழ்காலத்தில் தெளிவான சிந்தனை ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து ஸ்திரமான பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும்'' என்ற வாசகத்துடன் பல அரசியல் கட்டுரைகளை தாங்கி வந்தது. இதில் ஈழத்தின் இனப்பிரச்சனை சம்பந்தமான பல அரசியல் கட்டுரைகள் தொடராகவும், பகுதி பகுதியாகவும் வெளியிடப்பட்டது. இதே நேரத்தில்தான் மேற்கு ஜேர்மனியில் இருந்து **'அத்தம்'** எனும் சஞ்சிகையும் வெளிவரத் தொடங்கியது. பிற்பட்ட காலப்பகுதியில் மேற்கு ஜேர்மனியில் இயங்கும் தென்னாசிய நிறுவனத்தால் 1986ல் வெளியிடப்பட்டு வந்த 'தமிழ் செய்திக் குறிப்பு' 1988ல் இருந்து ''தூண்டில்'' சஞ்சிகையாக மாற்றம் பெற்று வெளிவந்தது. இதுவரை **'தூண்டில்'** 60 இதழ்களுக்கு மேல் வெளியிட்டுள்ளது. அண்மைக் காலத்தில் **'இரவல் தூண்டில்'** என்னும் பகுதியை ஆரம்பித்து அதனையும் தனி இதழாக இலவச இணைப்பாக, வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. இதைத்தவிர ஜேர்மனியில் இருந்து 'கதிர்', 'புதுமை', 'சமர்', **'தேனீ'**, **'அக்னி'**, **'நமதுகுரல்'**, 'சிறுவர் அமுதம்' போன்ற சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. இவற்றுடன் இங்கிலாந்திலிருந்து **'பனிமலர்'**, 'அலை ஓசை', **'உயிர்ப்பு'**, சுவிஸ்லாந்திலிருந்து 'மனிதம்', **'விடுதலைப் பாதை'**, நெதர்லாந்திலிருந்து 'சுமைகள்', **'ஆனா ஆவன்னா ஈனா'**, டென்மார்க்கிலிருந்து **'சஞ்சீவி'**, நோர்வேயிலிருந்து **'சக்தி'**, 'சுவடுகள்', அவுஸ்திரேலியாவிலிருந்து 'மரபு', **'அக்கினிக் குஞ்சு'**, பிரான்சிலிருந்து **'ஓசை'**, **'தேடல்'**, **'கண்'**, கனடாவிலிருந்து **'தேடல்'**, **'பார்வை'**, **'தமிழ்எழில்'**, 'காலம்', **'நான்காவது பரிமாணம்'** போன்றவை வெளியாகும் முக்கியமான சஞ்சிகைகளாகும். இவை தவிர அண்மைக் காலங்களில் மேற்குலகு நாடுகளில் இருந்து செய்திப் பத்திரிகைகளும் வெளிவரத் தொடங்கியுள்ளது. பாரிசிலிருந்து **'பாரீஸ்முரசு'**, என்றும் கனடாவில் **'தாயகம்'**, செந்தாமரை, தமிழோசை, உலகத்தமிழர் என்றும் இங்கிலாந்திலிருந்து **'தமிழோசை'** என்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**பெண்களின் வெளியீட்டு முயற்சிகள்:**

இங்கு குறிப்பிடப்பட்ட சஞ்சிகைகளில் இரண்டு பெண் அமைப்புக்களினால் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது. ஈழத்தில் வெளியிடப்பட்ட **'தோழி'**, **'பெண்ணின் குரல்'** போன்று பாரிசில் இயங்கும் இலங்கை மகளிர் சங்கத்தினால் **'கண்'** என்ற சஞ்சிகையும், **'ஹேர்ண பெண்கள்'** வட்டத்தினால் **'நமது குரல்'** என்ற சஞ்சிகையும், வெளியிடப்படுகிறது. கண் பத்திரிகையில் இடைஇடையே பிரெஞ்சு மொழியிலும் கட்டுரைகள் வெளியாவதுண்டு. சொந்த நாட்டை விட்டு வெளியேறும் மக்கள் மத்தியில் பெண்களும் பல பிரச்சனைகளுக்கு உள்ளாவது கண்கூடு. இந்த நிலையில் அந்நிய சூழல், மொழி, தனிமை, புதிய சமுக கலாச்சார பாரம்பரியம், என்பவற்றிற்கு இடையே தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அந்நியமாகி நிற்கும் பெண்களின் மத்தியில், அவர்களின் சோகம் சொல்லும்படைப்புக்கள், வெளிவரவேண்டியது காலத்தின் தேவையாகிறது. அந்தவகையில் இத்தகைய வெளியீடுகள் அவர்களின் நிலையை இனங்கண்டு, பெண்கள் அமைப்புகள் உதவுவதற்கு உதவியாக இருக்கின்றது.

சஞ்சிகை அமைப்பு:

இங்கு வெளிவரும் சஞ்சிகைகளில் அநேகமானவை அளவிலும் அமைப்பிலும் ஏறத்தாழ ஒரே வகையினதாகவே காணப்படுகின்றன. பல சஞ்சிகைகள் தமிழில் டைப் செய்யப்பட்டு, போட்டோ பிரதியில் வெளியாகிறது. சில சஞ்சிகைகள் கணனிமயப்படுத்தப்பட்ட நிலையில் அழகிய எழுத்துக்களுடன் நவீன ஓவியங்களுடனும் வெளியாகின்றது. இவை அதிகமாக 20cm × 15cm அளவில் சராசரி 30-50 பக்கங்கள் கொண்டவையாக வெளிவருகின்றன. ஆரம்ப காலத்தில் இவற்றில் பல சஞ்சிகைகள் கையெழுத்தில் எழுதப்பட்டு போட்டோ பிரதி செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இவற்றில் 'அத்தம்', 'பனிமலர்', 'அலைஓசை', 'நான்காவது பரிமாணம்', 'கதிர்', என்பன பெரிய அளவில் (டைப்பிங் சீட் அளவு) வெளிவருகின்றது. 'கதிர்' சஞ்சிகை முற்று முழுதாக கணனிமயப்படுத்தப்பட்டு அச்சில் பல வர்ணங்களில் வெளிவரும் சஞ்சிகையாகும். அண்மைக் காலமாக லண்டனில் இருந்துவரும் 'உயிர்ப்பு', 80 பக்கங்களுக்கு மேல் கணனிமயப்படுத்தப்பட்டு அச்சில் வெளிவருகின்றது. உயிர்ப்பில் முற்று முழுதாக அரசியல் கட்டுரைகள் மட்டுமே இடம்பெற்று வருகின்றது. சில சஞ்சிகைகள் தமது பக்கங்களில் அரைவாசியை கணனிமயப்படுத்தியும், மிகுதியை டைப்செய்தும் வெளியிடுகின்றன. சில தமது விளம்பர பக்கங்களை மட்டும் கணனிமயப்படுத்தி வெளியிடுகின்றன. நிறுவனங்களின் வசதிக்கு ஏற்ற வகையில் சஞ்சிகைகள் அழகிய அமைப்புடனும், பக்கங்கள் அதிகரித்தும் வெளியாகின்றது. இவற்றில் சிலவே இலங்கைவாழ் அன்பர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

படைப்பும் படைப்பாளிகளும்:

இச்சஞ்சிகைகள் அனைத்திலும் பொதுவாக காணப்படக்கூடிய ஒன்று படைப்புக்கள் மறுபிரசுரம் செய்யப்படுகின்றமை. தரமான படைப்புக்கள் எந்த ஒரு சஞ்சிகையில் வெளிவந்தாலும் அவை மீண்டும் இன்னுமொரு சஞ்சிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டு தமது வாசகர்களுக்கு அளிக்கப்படுகின்றது. சிலவேளைகளில் அட்டைப்படங்கள் கூட மறுபிரசுரம் செய்யப்படுகின்றமையும் உண்டு. அந்த வகையில் 'தூண்டில்' என்னும் சஞ்சிகை தன்னுடன் இணைந்த இலவச இணைப்பாக 'இரவல் தூண்டில்' என்னும் பகுதியை ஆரம்பித்து வெளிநாடுகளிலும், ஈழத்திலும், இந்தியாவிலும் வெளியாகும் பத்திரிகை சஞ்சிகைகளில் இருந்து படைப்புக்களை மறுபிரசுரம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக இச்சஞ்சிகைகளில் வெளியாகும் படைப்புக்கள் அரசியல் கட்டுரைகளாக, அரசியல் செய்திகளாக, குறிப்புக்களாகவும் மற்றும் சிறுகதை, தொடர்கதை, கவிதைகள் எனவும், நவீன ஓவியங்கள் பற்றிய செய்திகளாகவும், காணப்படுகின்றன. சில சஞ்சிகைகள் சர்வதேச ரீதியிலான கண்ணோட்டத்துடன் அரசியல் கட்டுரைகளையும், செய்திகளையும் வெளியிடுகின்றன. அரசியல் கட்டுரைகள் ஆசிரியர் உரை, சம்பந்தமாக பல சஞ்சிகைகளுக்கிடையே கருத்து மோதல்களும், தாக்குதலும், இடம் பெறுவதுண்டு. ஒவ்வொரு சஞ்சிகையும் அவை, அவை தாம் சார்ந்த இயக்கங்களின், அரசியல் கட்சிகளின், அமைப்புக்களின், நிலைப்பாட்டை வலியுறுத்தும் பிரச்சார பீரங்கியாகவும் செயற்பட இவற்றில் இருந்து விலகி ஒரு சில சஞ்சிகைகள் பொதுமையான நோக்கில் 'இலக்கியம்' என்ற நிலையில் வெளிவருகின்றன.

இச்சஞ்சிகைகளில் அதிகம் ஈழத்தின் இளம் எழுத்தாளர்களே இடம் பெறுகின்றனர். இவர்களில் பலர் தற்போது வெளிநாடுகளில் வாழ்வதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அனைத்து சஞ்சிகைகளிலும், சேரன். வ.ஐ.ச. ஜெயபாலன் ஆகியோரின் கவிதைகள் வெளியாவதும், மறுபிரசுரம் செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இன்று சமுகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல, காத்திரமான, சுதந்திரமான, இலக்கியம், புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் மத்தியில் தோன்றி வளரத் தொடங்கியுள்ள நிலையில் இவற்றை வெளிக்கொணரும் சாதனங்களாக இருக்கும் இந்த இலக்கிய வெளியீடுகள் தொடர்ந்தும் வெளிநாடுகளில் வெளிவர வேண்டியதும். அவை இலங்கை படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும், அதிகளவில் அறிமுகப்படுத்தப்பட வேண்டியதும் முக்கியமானதாகும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

# நன்றிக்குரியவர்கள்

ஆசிச்செய்தி வழங்கியோர்
பிரதம விருந்தினர்
விழாத்தலைவர்
ஆக்கங்கள் படைத்தோர்
பரிசில் பெறுவோர்
நடுநிலையாளர்கள்
படைப்பாளிகள்
பதிப்பகத் திணைக்களத்தினர்
மற்றும்
ஒத்தாசை புரிந்தோர்
அனைவர்களுக்கும்
எமது நன்றியை நவில்கின்றோம்.

**- விழா ஏற்பாட்டுக் குழுவினர்**

பதிப்பகத் திணைக்களம், வ. கி. மா. சபை,
திருக்கோணமலை.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை.
பதிவு இல. 73
10. 5 1950
அறக்கட்டளை நி[illegible]யம்
கசெட் இல. 148[illegible]5
7 6. 1968